## 2.142 வானொலி / தொலைக்காட்சி பெட்டிகளை இயக்கும் பணியை கிராம ஊராட்சிகளில் உள்ளூரில் உள்ள தன்னார்வத் தொண்டர்கள், மகளிர் மன்றங்கள் மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மூலம், செலவினம் ஏதுமில்லாமல் செய்தல்

ஊரக வளர்ச்சி (தி3) துறை

அரசாணை (நிலை) எண். 125 நாள் : 16.5.2000

படிக்க :

1. அரசாணை (2டி) எண். 149, ஊரக வளர்ச்சி, நாள் 9.7.99
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க. 27094/ஈ/99, நாள் 6.4.2000

**ஆணை**

கிராம ஊராட்சிகள் பணியமைப்பை அவைகளின் நிதிநிலைகளுக்கு ஏற்ப சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய, படிக்கப்பட்டவை ஒன்றில் குறிப்பிட்ட அரசாணையில் ஏற்படுத்தப்பட்ட குழு, கிராம ஊராட்சிகளில் தற்பொழுது 58186 தொலைக்காட்சிப் பெட்டிகளும், 8267 வானொலிப் பெட்டிகளும் உள்ளன என்றும், அவற்றை இயக்குவதற்கு மட்டும் தலா மாதம் ரூ.25/– முதல் ரூ.50/– வரை ஊதியமாக, மொத்தம் ஆண்டுதோறும் சுமார் ரூ.1.92 கோடி ஊராட்சிகளால் செலவழிக்கப்படுகிறது என்றும், இயக்கும் பணி பெரும்பாலும் மாலை ஓரிரு மணி நேரங்களில் முடிவடைவதால், அதற்கென்று ஒரு பணியாளரும், அவருக்கென்று ஒரு தொகை ஊதியமாக வழங்கப்படுவதும், வளர்ச்சித் திட்டங்களில் மக்களும்,தன்னார்வ குழுக்களும் பங்கேற்க முன்வரும் இந்நாளில் அவசியமில்லாதது என்றும், அதனைத் தவிர்த்தால், ஊராட்சிக்கு செலவினம் குறையும் என்றும், தனது அறிக்கையில் தெரிவித்து கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது:–

பரிந்துரை எண் 3 :

வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்குவதற்கு அவ்வூரிலுள்ள தன்னார்வ தொண்டர்கள், மகளிர் மன்றங்கள், மற்றும் மேல்நிலைத் தொட்டி இயக்குபவரிடம் இப்பணியை ஒப்படைக்கலாம். இதனை தொடர்புடைய ஊராட்சித் தலைவர்கள் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் பொறுப்பு நிர்ணயம் செய்தும், இதற்கென தனியாக பணியாளர் தேவையில்லை எனவும் அரசு ஆணையிடலாமென இக்குழு பரிந்துரை செய்கிறது.

2. மேற்கண்ட பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தபின், அதனை ஏற்க முடிவு செய்துள்ளது. அதன்படி வானொலி/தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்கும் பணியை கிராம ஊராட்சிகளில் உள்ளூரில் உள்ள தன்னார்வத் தொண்டர்கள், மகளிர் மன்றங்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மூலம் செய்ய வேண்டுமென்றும் இதற்கென பணியாளர்களை தனியாக நியமனம் செய்வதோ, செலவினம் ஏதும் மேற்கொள்வதோ கூடாது என்றும் அரசு ஆணையிடுகின்றது. மேலும் இதனை செயற்படுத்துவதும், கண்காணிப்பதும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித்தலைவரின் பொறுப்பு என்றும் நிர்ணயிக்கப்படுகின்றது.

3. இந்த அரசாணையை அனைத்து கிராம ஊராட்சித்தலைவர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.1370/FS/P/2000, நாள் 3.5.2000–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்